**நவம்பர் – 04**

# TNPSC துளிகள்

- மைக்ரோசாப்ட் கார்ப்பரேசன் நிறுவனமானது ஆப்பிள் நிறுவனத்தை விஞ்சி சந்தை மூலதனத்தில் உலகின் மிகவும் மதிப்புமிக்க ஒரு பொது வர்த்தக நிறுவனமாக மாறி உள்ளது.
- மத்திய அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் உத்தரகாண்டின் முசௌரியிலுள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தில் சர்தார் படேல் தலைமைத்துவ மையத்தினைத் திறந்து வைத்தார்.
    - இந்த வசதி மையமானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று நடைபெற்ற ராஷ்டிரிய ஏக்தா திவாஸ் அன்று திறந்து வைக்கப் பட்டது.
- ஆசிய மேம்பாட்டு வங்கியானது இந்தியாவின் தேசியத் தொழில்துறை வழித்தட மேம்பாட்டுத் திட்டத்திற்கு உதவி வழங்குவதற்காக 250 மில்லியன் டாலர் கடனுக்கு (ரூ.1575 கோடி) ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - இது 17 மாநிலங்களில் 11 தொழில்துறை வழித்தடங்களை உருவாக்குவதற்காக 500 மில்லியன் டாலர் கடன் வழங்கும் திட்டத்தின் முதல் துணைத் திட்டமாகும்.
- தேசிய சிறியத் தீப்பெட்டித் தயாரிப்பாளர்கள் சங்கமானது ஒரு தீப்பெட்டியின் விலையை 1 ரூபாயிலிருந்து 2 ரூபாயாக உயர்த்தியுள்ளது.
    - 2007 ஆம் ஆண்டில் ஒரு தீப்பெட்டியின் விலையானது 50 பைசாவிலிருந்து 1 ரூபாயாக உயர்த்தியதற்குப் பிறகு 14 ஆண்டுகள் கழித்து இந்த விலை உயர்வானது அறிவிக்கப் பட்டுள்ளது.
- உலக சைவ உணவுப் பழக்கத் தினமானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 1 அன்று அனுசரிக்கப் படுகிறது.
    - மனிதர்கள், மனித இனத்தைச் சாரா விலங்குகள் மற்றும் இயற்கை சூழல்களுக்கு சைவ உணவுப் பழக்கத்தால் ஏற்படும் நன்மைகளைப் பரப்பும் நோக்கத்துடன் இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.

# தேசியச் செய்திகள்

## பருவநிலைச் சமவிகித கண்காணிப்பு அமைப்பு

- பருவநிலைச் சமவிகித கண்காணிப்பு அமைப்பு என்பது சமீபத்தில் தொடங்கி வைக்கப் பட்ட ஓர் இணையவழி முகப்புப் பக்கமாகும்.
- இந்தியாவினுடைய பருவநிலைச் சமவிகிதக் கண்காணிப்பு அமைப்பானது, உலகம் முழுவதுமான பருவநிலை நடவடிக்கை, உமிழ்வு நிலையிலுள்ள ஏற்றத் தாழ்வுகள், ஆற்றல் மற்றும் வள நுகர்வு மற்றும் பல நாடுகளின் தற்போதையப் பருவநிலை கொள்கைகளை மதிப்பிடும்.
- இது முக்கியப் பிரச்சினைகள் குறித்த ஒரு தீவிர விவாதத்தினை ஏற்படுத்தி அதில் அனைத்து நாடுகளின் நிபுணர்களையும் ஈடுபடச் செய்யும்.

## NCLAT தலைவர் – அசோக் பூசன்

- மத்திய அரசானது உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அசோக் பூசன் அவர்களை தேசிய நிறுவனச் சட்ட மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் புதிய தலைவராக

நியமித்துள்ளது.

- இவர் கேரள உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஆவார்.
- இந்தத் தீர்ப்பாயமானது 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 410 ஆவது பிரிவின் கீழ் அரசினால் உருவாக்கப் பட்டது.



## நவம்பர் 01

- இந்தியாவில் ஆந்திரப் பிரதேசம், ஹரியானா, சத்தீஸ்கர், கேரளா, கர்நாடகா, பஞ்சாப் & மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட 7 மாநிலங்கள் மற்றும் லட்சத்தீவு, புதுச்சேரி ஆகிய இரு ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவை 2021 ஆம் ஆண்டு நவம்பர் 01 அன்று அவற்றின் ஸ்தாபன தினத்தைக் கொண்டாடுகின்றன.
- கர்நாடகத்தில் இத்தினமானது 'இராஜ்யோத்சவ்' எனக் கொண்டாடப்படுகிறது.
- முன்பாக தமிழ்நாடு மாநிலமும் நவம்பர் 01 அன்று அதன் ஸ்தாபன தினத்தைக் கொண்டாடி வந்தது.
- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 30 அன்று தமிழகத்தின் ஆளும் கட்சியான தி.மு.க. ஜூலை 18 ஆம் தேதியானது தமிழ்நாட்டின் ஸ்தாபன தினமாக கொண்டாடப்படும் என அறிவித்தது.




## டெய்ரி சஹாகர் திட்டம்

- மத்தியக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக்

கழகத்தின் டெய்ரி சஹாகர் என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

- இத்திட்டத்தின் ஒட்டு மொத்த குறிக்கோள்களானது,
  - விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் மற்றும்
  - ஆத்ம நிர்பர் பாரத் ஆகும்.
- 5000 கோடி ரூபாய் முதலீட்டுடன் "கூட்டுறவு முதல் செழிப்பு வரை" (from cooperation to prosperity) என்ற ஒரு நோக்கத்தைச் செயலாக்குவதற்காக வேண்டி இந்த டெய்ரி சஹாகர் திட்டமானது அமல்படுத்தப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## மிலு மான்


- அழிவின் விளிம்பிலிருந்து மிலு வகை மான் இனம் மீண்டு வந்தது சீனாவின் வளங்காப்பு முயற்சிகளுக்குக் கிடைத்த ஒரு அரிய வெற்றியைக் குறிக்கிறது.
- மிலு மான் (எலாபுருஸ் டேவிடியினஸ்) ஓர் அரிய மற்றும் அருகி வரும் இனமாகும்.
- பைரே டேவிட் மான் எனவும் அறியப்படும் இவ்வகை மான்கள் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அழிவின் விளிம்பில் இருந்தன.
- மிலு வகை மான்கள், சீனாவின் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவையாகும்.



# பொருளாதாரச் செய்திகள்

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மீதான வட்டி விகிதம்

- 2020-21 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகளின் மீதான வட்டி விகிதத்தினை 8.5% ஆக விதித்து நிதி அமைச்சகம் அங்கீகரித்துள்ளது.
- இந்த விகிதமானது 2019-20 ஆம் ஆண்டில் மாற்றப்படாமல் இருந்தது.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியானது PPF மற்றும் சுகன்யா சம்ரிதி ஆகிய கணக்குகளுடன் விலக்கு - விலக்கு - விலக்கு என்ற திட்டத்தின் கீழ் முழுவதும் வரி விலக்கு பெற்ற ஒரு நிலையான வருவாய் வசதியாகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உமிழ்வுநிலைப் பட்டியலுக்கு இந்தியா அங்கீகாரம்

- இத்தனை ஆண்டுகளாக வளர்ச்சியடைந்த நாடுகள் (வரலாற்று ரீதியிலான) வெளியிட்ட கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினைப் பட்டியலிடுகின்ற, இந்தியப் பருவ நிலை நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட ஒரு வலைதளத்திற்கு இந்தியா அதிகாரப் பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளது.
- வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் உமிழ்வுகளில் உள்ள வேறுபாட்டினை எடுத்துரைக்கும் நோக்கத்துடன் இந்த உமிழ்வுப் பட்டியலானது தயாரிக்கப் பட்டது.
- அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் போன்றவை நிகர கார்பன் கடனைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப் படுகின்றன.
- இந்தியா மற்றும் சீனா போன்ற வளர்ந்து வரும் நாடுகள் நிகர கடனைப் பெற்று உள்ளன.
- எனவே வளர்ந்து வரும் நாடுகளைவிட உமிழ்வைக் கட்டுப்படுத்துவதற்கான உயரிய இலக்குகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் உறுதியளிப்பதே நியாயமானது என்று இந்த தரவுத்தளம் குறிப்பிடுகிறது.

*குறிப்பு*

- வருடாந்திர அடிப்படையில் கரியமில வாயு உமிழ்வில் இந்தியா 3வது பெரிய நாடாக உள்ளது.
- இருப்பினும் அதன் வரலாற்று ரீதியிலான உமிழ்வின் அடிப்படையில் அது 6வது பெரிய உமிழ்வு நாடாகவே உள்ளது.
- தனது மக்கள் தொகை அளவைக் கருத்தில் கொள்கையில் தனிநபர் உமிழ்வில் இது மிகக் குறைவான அளவையேக் கொண்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## ஆப்பிள் திருவிழா

- மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் மற்றும் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா ஆகியோர் காணொளி வாயிலாக ஆப்பிள் திருவிழாவைத்

தொடங்கி வைத்தனர்.

- இது ஜம்மு & காஷ்மீரின் ஸ்ரீநகரில் முதன்முறையாக தொடங்கப்பட்டுள்ளது.
- ஆண்டுக்கு 2 மில்லியன் மெட்ரிக் டன்களுக்கும் அதிகமான உற்பத்தியோடு ஜம்மு & காஷ்மீரின் ஆப்பிள் உற்பத்தியானது தேசிய உற்பத்தி அளவில் 87% பங்கினை வகிக்கிறது.

## சிந்து நதி ஓங்கில் - கணக்கெடுப்பு

- பஞ்சாப் மாநிலமானது சிந்து நதி ஓங்கில்களின் கணக்கெடுப்பைத் தொடங்க உள்ளது.
- சிந்து நதி ஓங்கிலின் அறிவியல் பெயர் பிளாடானிஸ்தா கேஞ்ஜெட்டிகா மைனர் ஆகும்.
- இது பியாஸ் நதியில் காணப்படும் ஒரு நன்னீர் ஓங்கிலாகும்.
- இந்தத் திட்டமானது 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.
- 2019 ஆம் ஆண்டில் சிந்து நதி ஓங்கிலானது பஞ்சாபின் மாநில நீர்வாழ் உயிரினமாக அறிவிக்கப் பட்டது.

★★★★★★★★★★